# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 13.02.2023**

**அசல் வழக்கு எண்.39/2014**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2ம் தபசில் நடைபாதை எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. 2ம்தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யதுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் ஆவணம் என் பூட்டன் கிரையம் வாங்கிய ஆவணம். என் பூட்டன் பெயர் குருசாமிநாடார். 2ம் தபசில் நடைபாதைக்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். அரசு வருவாய் ஆவணங்களில் 2ம் தபசில் நடைபாதை அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1990 ம் ஆண்டில் 1ம் தபசில் சொத்திற்கு என் பெயருக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்கியபோதே 2ம் தபசில் சொத்து அரசு புறம்போக்காக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரச்சனை ஏற்பட்ட பிறகுதான் நான் ஆவணங்களை சரிபார்த்தேன். 2014ம் ஆண்டில் பிரச்சனை ஏற்பட்டபிறகாவது 2ம் தபசில் சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்ககோரி நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

2. 2ம் தபசில் நடைபாதை தென்வடலாக அமைந்துள்ள நடைபாதை என்றால் சரிதான். 2ம் தபசில் நடைபாதைக்கும் தெற்குபுறம் என் வீடு உள்ளது. 2ம் தபசில் நடைபாதைக்கு மேல்புறம் பிரதிவாதியின் வீடு உள்ளது. பிரதிவாதியின் வீட்டின் கீழ்புற சுவர் பூசப்பட்டு வெள்ளையடிக்கபட்டு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிராதில் 2ம் தபசில் சொத்தின் நடைபாதையின் அளவு கிழமேல் 4 1/2 அடி அகலம் கொண்ட நடைபாதை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டபோது நானும் உடனிருந்தேன். நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் பிரதிவாதியின் வீட்டின் கீழ்புற சுவரில் 2ம் தபசில் நடைபாதையை பார்த்தப்படி நான்கு ஜன்னல்கள் அமைத்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒரு ஜன்னல்தான் கட்டியுள்ளார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் நான்கு ஜன்னல்கள் உள்ளது என்றால் சரிதான்.

3. பிரதிவாதியின் வீட்டின் கீழ்புறசுவருக்கு கிழக்கு பக்கத்தில் புதிதாக பள்ளம் எடுக்கப்பட்டு பூசப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் கீழ்புறச்சுவரில் அவருடைய வீட்டின் மாடி பகுதிக்கு செல்லக்கூடிய குழாய் பைப்புகள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் கீழ்புறச்சுவரில் தகரசாய்வு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வெளியூர் சென்றிருந்த காலத்தில் பிரதிவாதி தன்னுடைய வீட்டின் கீழ்பக்கத்தில்

அமைந்திருந்த கழிவுநீர் செல்லும் குழாய் பைப்புகளை நான் உடைத்து அப்புறப்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**